பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி *செய்திகள்*

17 09 2025 7.15

*தலைப்புச் செய்திகள்*

- ஜவுளித்துறையின் மேம்பாட்டுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்களோடு இனி வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்களும் இடம் பெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது

- ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று அதன் பொதுச்செயலாளர் திரு. Antonio Guterres வலியுறுத்தியுள்ளார்.

- இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றிபெற 293 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

ஜவுளித்துறையின் மேம்பாட்டுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Dhar-ல் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

உற்பத்தி தொடங்கி ஏற்றுமதி வரை ஜவுளித்துறைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

>><><><><<

நாட்டு நலனுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் பிரதமர் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திர மோடி, ஏழை, மகளிர், விவசாயிகள் மற்றும் இளையோர் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் அனைத்துத் துறைகளும் சுயசார்பினை எட்ட வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**>><><><><<**

நவீன இந்தியாவின் சிற்பியாக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்கிறார் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் பிறந்த தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழும வளாகத்தில் 75 மரக்கன்றுகளை நடும் விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் ஓய்வின்றி பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தை பிரதமர் தொடங்கி வைத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த இயக்கத்திற்கு மக்களிடையே ஆதரவு பெருகி வருவதாகவும் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறினார்.

>><><><><<

தூய்மைப் பணிகள் மேற்கொள்வதை நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று  துய்மையே சேவை இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சிறுபான்மையினர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக அமைச்சர் கூறினார்.

>><><><><<

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்களோடு இனி வேட்பாளர்களின் வண்ண புகைப்படங்களும் இடம் பெறும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் இந்த நடைமுறை தொடங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களை எளிதாக அடையாளம் கண்டு வாக்கு அளிக்கும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சில மாற்றங்களை மேற்கொள்ளும் நெறிமுறைகளையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

>><><><><<

தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் தரமானதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் நிறைவேற்றப்படுவது உறுதி செய்யப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கான நெறிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டு உள்ளதாக தேசிய நெடுஞ்சாலைத்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள நெறிமுறைகள் தற்போது கடுமையாக்கப்பட்டு உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், நெடுஞ்சாலை திட்டங்கள் தகுதியான ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டு, தரமான நெடுஞ்சாலை கட்டமைப்புகளை உருவாக்குவது உறுதி செய்யப்படும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

தில்லியில் காற்று மாசை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து மூன்று வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தில்லி மாசு கட்டுப்பாட்டு

வாரியம், மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் காற்று தர நிர்ணய ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாசு கட்டுப்பாட்டு வாரியங்களில் காலியாக பணியிடங்களை நிரப்புவது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

>><><><><<

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, ஆப்பிரிக்காவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என்று அதன் பொதுச்செயலாளர் திரு. Antonio Guterres வலியுறுத்தியுள்ளார்.

நிரந்தர உறுப்பினர்களின் VETO அதிகாரத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை தாம் ஆதரிப்பதாக அவர் தெரிவித்தார்.

உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஐ.நா-வின் பங்கை உறுதி செய்ய சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் திரு. Antonio Guterres கூறினார்.

>><><><><<

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டில் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்று அமெரிக்காவின் கடன் மற்றும் தர நிர்ணய அமைப்பு கூறியுள்ளது.

உலகளாவிய பிரச்சினைகள் இருந்த போதிலும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக அந்த அமைப்பின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளை விட, இந்தியா பொருளாதாரம் மேம்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><<

அக்னிவீர் ஆள்சேர்ப்பு முகாம், தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் நாளை தொடங்குகிறது.

இதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செயதியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்-செல்வன் ஜெபராஜ்- 50 செகண்ட்ஸ்)

>><><><><<

ஜம்மு கஷ்மீரின், பூஞ்ச் மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களை முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா இன்று பார்வையிட்டார்.

இந்த நிலச்சரிவால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதுடன், 95 வீடுகள் சேதமடைந்தன.

>><><><><<

மைக்ரோசாப்ட் நிறுவனம் பிரிட்டனில் முதலீடு செய்வதை உறுதி செய்துள்ளதாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு. Satya Nadella தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், பிரிட்டன் நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer இடையேயான பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.

>><><><><<

நேபாளத்தில் GenZ போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இன்று துக்கம் அனுசரிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இன்று செயல்படவில்லை.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 293 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் ஆஸ்திரேலியா சற்றுமுன் வரை 24.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 108 ரன் எடுத்துள்ளது.

சண்டிகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 49 புள்ளி ஐந்து ஓவரில் 292 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Smiriti Mandhana அதிரடியாக ஆடி 91 பந்துகளில் 117 ரன் குவித்தார்.

--------------

டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பந்துவீச்சுப் பிரிவில் இந்தியாவின் வருண் சக்ரவர்த்தி முதலிடத்தை பிடித்துள்ளார்.

--------------

உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்றில் 84 புள்ளி எட்டு ஐந்து மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து அவர், இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

---------------

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் இந்தியாவின் Antim Panghal அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

குரேஷியாவின் Zagreb-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், சீனாவின் Zhang Jin -ஐ வென்றார்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் பிரியா மாலிக் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

------------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>> End of News <<